உ
சிவமயம்

தெல்லியூர் அரசனார் வளவு விநாயகர்



தெல்லிப்பழை - பொன்னர் வளவு

திரு. ச. துரைராசா அவர்களின் அன்பு மனைவி

# திருமதி பாக்கியரத்தினம் அம்மையார்

அவர்கள் இறைபதம் அடைந்தமை குறித்த

# நினைவு மலர்

## 23-05-1998

கொழும்பு-06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

இல்லறத்து நல்விளக்கே!
ஈடில்லாக் குணக் குன்றே!
நல்லறத்து வழி நின்று!
நம்மை நாளு மாக்கியவளே!
தொல்லுலகில் நாம் வாழ
நல்வழிகள் காட்டியவளே!
சொல்லறத் இம் மலரை!
நின் பாதம் தந்தோமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை - பொன்னர் வளவு

# அமரர் திருமதி து. பாக்கியரத்தினம் அவர்கள்

**பிறப்பு:**
**31-08-1920**

**இறப்பு:**
**23-04-1998**

## திதி நிர்ணய வெண்பா

இல்லகத்து நல்விளக்காய் நின்று ஒளிவிரித்து
நல்லுலகை நண்ணிவிட்ட தெய்வமதை – எல்லவரும்
பாக்கியரத்தினம் என்றுரைப்பர் அன்னாரின் நல்லியல்கள்
வான்மழைக்கும் காரணமாம் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



# தோத்திரத் திரட்டு

## விநாயகர் வணக்கம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

## தேவாரம்

### திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி
காடுடைய சுடலைப் பொடிபூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

### திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே

### சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின் றிருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேனினிப் பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கரை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா வுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட
போதே கொண்டிலையோ?
இன்றோ ரிடையூ றெனக் குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூற்றுகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிட
பாற் கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாக
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம்

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்த பின்
அன்பே சிவமா யமர்ந்த திருப் பாரே.

## பட்டினத்தார்

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்லப் பெண்டீர் சதமல்லப் பிள்ளைகளும்
சீருஞுஞு சதமல்லச் செல்வஞ் சதமல்லத் தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்தாள் சதங்கச்சி ஏகம்பனே.

## புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழந்துபாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி பாக்கியரத்தினம் துரைராசா அவர்களது
# வாழ்க்கை வரலாறு

தோற்றுவாய்:

இந்துமா கடல் நடுவே எழில் முத்தாய் திகழ்கின்ற வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் நாற்புறமும் இறையருள் பரப்பும் திருக்கோயில்கள் சிகரமென விளங்கும் சிறப்புமிக்க இடமே தெல்லிப்பழை.

தமிழ்மக்களின் மூதாதையினர் எனப்போற்றும் அமரர் தந்தை செல்வா, அமரர் ரெயிலர் துரையப்பா வள்ளலாரும் வாழ்ந்து அறிவுபெருக்கிய இம்மண் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டதாகும். ஆரம்ப கல்வி பயிலத் தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியும், உயர்கல்வி சிறப்புறக் கற்க தெ/ யூனியன் கல்லூரி, தெ/மகாஜனாக் கல்லூரி, மக்கள் பசி தீர்க்க பச்சைப் பசேல் என விளங்கும் வயல்களும், இந்து சமயம் பரப்ப நல்ல இந்து இளைஞர் மன்றம், மக்கள் நோய்தீர்க்க இலவச வைத்தியசாலை, பெற்றோரை இழந்த பெண் சிறார்களை பராமரிக்க சிறப்பான மகளிர் இல்லம், இத்தனையும் அவ்வூர் அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவியின் கருணையால் கிடைக்கப்பெற்றவை.

இத்தனைக்கும் மத்தியில் பொன்னம்பலம் கண்ணகை தம்பதியினர் இயற்றிய இல்லற வாழ்வில் உதித்த சுப்பிரமணியமும் அதே மரபில் வந்த அருந்துதிப்பிள்ளை அவர்களும் மலேசியாவில் இயற்றிய நற்றவப் பேற்றினால் அருந்தவப் புதல்வியாக பாக்கியரத்தினம் (பொன்னர் குடும்பத்தில்) மலேசியாவிலே பிறந்தார்.

பிறப்பும் கல்வியும்:

இவர் பண்பாடு அமைந்த தோன்றலாக சித்தார்த்தி வருஷம் 1920ம் ஆண்டு ஆவணி மாதம் 31ம் நாள் பிறந்தார். இவரின் பிறப்பால் குடும்பமே மகிழ்ந்து பேருவகை அடையும் வேளைதனில் 31ம் நாளதனில் தாயாரை இழந்தார். இதனால் குடும்பமே பொலிவற்றது ஆயிற்று. இத்தனைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் தந்தையார் தனது செல்வப் புதல்வியை தாயார் இல்லையே என்ற குறையேதும் இல்லாது தானே தாயாகவும் தந்தையாகவும் நின்ற அன்பும், பண்பும், பாசமும், நற்பழக்கமும் புகட்டி "கண்ணை இமைகாப்பது போல்" வளர்த்தெடுத்தார். இவருக்கு கல்வி புகட்டும் வயதினை எட்டியதும் ஆரம்பக் கல்வியை மலேசியாவிலே பயில வைத்தார். இவ்வேளையில் தந்தையார் தனது உறவினருடன் சேர்ந்து வாழ எண்ணி யமையினால் தாயகம் (இலங்கை) வந்த சமயம் இடைநிலைக் கல்வியை தெ/யூனியன் கல்லூரியிலும் தொடர்ந்து உடுவில் மகளிர் கல்லூரியிலும் பயில வைத்து கல்வியிலே மேன்மை பெற்றார்.

மணவாழ்க்கையும் மக்கட்பேறும்:

இவர் வளர்ந்து மணப்பருவம் அடைந்துவரும் வேளையில் இவர் தம் தந்தையார் அருமைப் புதல்விக்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்தற்காக தந்தையாரின் வேண்டு கோளுக்கிணங்க தமது அயலூரான உடுவில் எனும் ஊரில் தமது குடும்பத்திற்கு ஏற்ற சபாபதியும், செல்லாச்சிப்பிள்ளை யும் நோற்றநோன்பால் உதிர்த்த ஏக புத்திரன் துரைராசா வைத் திருவருள் கூட்ட பெற்றோரும், உற்றாரும், கற்றோ ரும் வாழ்த்த (01-07-1946) ல் மாலைசூட்டி துணைவனாக ஏற்றார். மணமக்கள் இருவரும் நகமும் சதையும்போல இல்லற வாழ்வில் இணைந்தார்கள். இவர்கள் செல் விருந்தோம்பி, வரு விருந்தளித்து நலம்பல கண்டனர்.

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலன் நன்மக்கட் பேறு"

இவர்களின் அயராத இறைவழிபாட்டினால் அறிவறிந்த மக்கள் அசோகன் நமசிவாயம், பாலகுமாரன் சபாபதி, அருந்ததி திவ்வியதர்சினி, நளினி பிரியதர்சினி, இந்துமதி செல்வதர்சினி, அகிலன் இராசையா எனும் நன்மக்களைப் பெற்றெடுத்தனர். இவர் தம் மக்களை நற்பழக்கம் கல்வி, ஒழுக்கம் என்பவற்றை சிறு வயதிலேயே ஊட்டிப் பேணிப் பாதுகாத்து வந்தார். இவர் தம் மக்களை பெரியோர் போற்றத் தக்க வகையிலும் கல்வியிலே மேன்மைபெறும் வகையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் மக்களின் வழிநடத்தலுக்கு அயராது பாடுபட்டு வந்தார்.

இக்கால கட்டத்தில் இவரின் சிரேஷ்ட புத்திரனாம் அசோகன் நமசிவாயம் நைஜீரியாவிலே கடமையாற்றினார். இவரின் மணவாக்கையை காணவிரும்பி (தற்போது கனடாவில்) இல்லறம் இயற்ற யாழ்நகர் அயலூரரான கந்தர்மடமெனும் ஊரில் கந்தையா சிவபாக்கியம் தம்பதியினரின் புத்திரி தவமணி என்பவரை இல்லறம் இயற்றி நல்லறம் செழிக்க மணமாக்கி வைத்தார்.

இரண்டாம் மகனாம் பாலகுமாரன் சபாபதி (Papua New Guienea)வில் கடமையாற்றும் வேளைதனில் மணவாழ்க்கையை எண்ணி மானிப்பாயூர் சின்னத்துரை சின்னத் தங்கம் தம்பதியினரின் புத்திரி சாந்தினியை இல்லறம் புரிய நல்லறம் செழிக்க மணமாக்கி வைத்தனர். இவர்களின் இனிய இல்லற வாழ்வில் திலோத்தமி, தர்மினி எனும் மக்களை பேரராக்கண்டு பெருமகிழச்சி அடைந்தார்.

மூன்றாவது மகளாம் அருந்ததி திவ்விய தர்சினியின் எதிர்கால வாழ்வு நலம்பெற எண்ணி அயலிலுள்ள ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அலுவலகத்தில் பணிபுரியும் சேவையைக் கண்டு பேருவகை அடையும் வேளையிலே நாட்டு நிலைமை காரணமாக சேவை செய்யமுடியாத வேளையில் இவரை எண்ணி வேதனை அடையும் வேளையில் "திவ்வியா கைவேலைப் பயிற்சியை" (Handigraft) கொழும்பில் அமைத்து ஆசிரியராக பணிபுரிவதனைக் கண்டு ஓரளவு நிம்மதியடைந்தார்.

நான்காம் மகளான நளினி பிரியதர்சினியை இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தில் லிகிதராக கடமையாற்ற வைத்தார். இவரின் இல்லற வாழ்க்கை காணஎண்ணி சுன்னாகம், கந்தரோடையூர் ஆறுமுகம் தங்கம்மா தம்பதியினரின் புத்திரன் வரதராஜனை துணையாக வரித்தனர். இவர்களின் இனிய இல்லற வாழ்வில் உதித்த ஆதவிருட்சனை பேரனாக கண்டு பெருவாழ்வு வாழ்ந்தார்.

ஐந்தாவது மகளாம் இந்துமதி செல்வதர்சினி ஆவர். இவர் தம் மகளின் மணவாழ்வு காணவிரும்பி சுன்னாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dr. சுப்பிரமணியம் சிவபாக்கியம் தம்பதிகளின் புத்திரன் சிவகுமாரனை (Canada) மணம் முடித்து வைத்தனர்.

கடைசிச் செல்ல மகனாம் அகிலன் இராசாயாவை தனக்கு துணையென வளர்த்து வரும் நாள்தனில் இவரின் கல்விமேன்மை பெறவும் லண்டன் அனுப்பிவைத்து அங்கு பதவியை வகித்துள்ளார். இவரின் மணவாழ்வு காண விரும்பும் நேரமதனில் அம்மையாரைக் காலன் சதிசெய்து விட்டது.

உற்றாருடன்:

இவர் தம் மக்களைப் பெற்று பெருவாழ்வு வாழ்ந்தாலும் பிறரையும் தம் மக்களைப் போலநினைத்து பல வழிகளிலும் உதவி புரிந்து புத்திமதி கூறி நல்வழிப்படுத்தியமையினால் பெருவாழ்வு வாழ்ந்தார்.

தேற்றம்:

அன்புக் கணவர், மக்கள், மருமக்கள், பேரர், உற்றார், உறவினர், அயலவர் உள்ளிட்ட அனைவரும் பாராட்டிப் புகழத்தக்க வகையில் வாழ்ந்தவரான திருமதி. துரைராஜா பாக்கியரத்தினம் அம்மையாரின் தானதர்ம வழியை அடிநாதமாகக் கொண்டு இறைவழிபாட்டில் ஈடுபட்டவர் பூவோடும் பொட்டோடும் எழுபத்தெட்டு ஆண்டுகள் நிறை வாழ்வு வாழ்ந்த பெருமைக்கும் உரியவர் ஆவர்.

இவர் தம் மக்களின் பெருவாழ்வு கண்டு பேருவுகை அடைந்து இருக்கும் வேளைதனில் நிகழும் பெகுதானிய வருடம் சித்திரை மாதம் 10ம் நாள் (23-04-1998) பூர்வபக்க திரயோதசி திதியும் பூரட்டாதி நட்சத்திரமும் சேர்ந்து வந்த வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் திருமதி பாக்கிய ரத்தினம் அம்மையார் இறைவழிபாட்டுடன் கொழும்பிலே பூதவுடல் நீத்து புண்ணிய உலகினை நண்ணினார். நித்திய வாழ்வில் சித்தம்கொண்டு தவம் இருப்பவரை தடுக்க வல்லார் யார்? அத்தன் அடிகண்டு பிறவாத இறைவாத பெரும் பேற்றைப் பெற

"ஆத்திசூடி அமர்ந்த தேவனை ஏத்தி
ஏத்தி தொழுவோம் யாமே".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்தி உரை

இறைவனின் படைப்பில் பிறவி எடுக்கும் உயிர்கள் எல்லாம் என்றோ ஒருநாள் மறைவது நியதியானது. மண்ணில் பிறந்தவர்பயன் இறைவன் அருளை வேண்டி வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலேயாகும்.

இவ்வழியில் சிறப்பாக வாழ்ந்த திருமதி பாக்கியம் துரைராசா அம்மையாரின் மறைவுச் செய்தியினைக்கேட்டு நாம் மனத்துயருற்றோம்.

தாயாரின் பிரிவால் வாடும் குடும்பத்தாருக்கும் உற்றார் உறவினர்க்கும் எமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல துர்க்கா தேவியைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி!

**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்**

**பிரதம சிவாச்சார்யார்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை,**
**இலங்கை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுக்குரிய அம்மையார்

திருமதி பாக்கியரத்தினம் துரைராசா அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார் என்ற செய்தி வானொலி மூலம் பறந்துவந்து எனது காதில் விழுந்ததும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன். அம்மையாரின் குடும்பம் தெல்லிப்பழை துர்க்கை அம்பாளின் குடும்பமாகும். இவரது பிள்ளைகள் யூனியன் கல்லூரியில் எனது சேவைக் காலத்தில் கல்வி பயின்றவர்கள் கல்லூரி வாழ்விலும் பொதுவாழ்விலும் சிறப்பாக ஈடுபட்ட பெருமையும் இவருக்கு உண்டு.

அம்மையாரின் அமைதியான போக்கும் இனிய சுபாவமும் பெண் பிறந்தவர்க்குப் பெருமை தருவதாகும். தெல்லிப்பழையில் "பொன்னர் வளவு" என்றால் எல்லார்க்கும் ஆறுதலளிக்கும் ஓர் இடமாகும். அந்தப் புண்ணியப் பகுதியில் வாழ்ந்தவர்கள் இவர்கள். ஏறக்குறைய 58 வருடங்கள் இல்லற வாழ்வில் ஈடுபட்ட அம்மையாரின் தவப்பயனாக ஆறுபிள்ளைகள் அவதரித்தனர். இவர்களுடைய அன்பும் பற்றும் காரணமாக வாழ்வாங்கு வாழ்ந்து தனது எழுபத் தெட்டாம் வயதிலே இறைவனடி சேர்ந்தவர் அம்மையார். இவரது கணவனார் துரைராசா அவர்கள் குறையப்பேசி நிறையச் செயலாற்றுபவர். இத்தகைய பெருமைக்குரிய தலைவராக விளங்கியமைக்கு திருமதி பாக்கியரத்தினம் அவர்களும் பக்கபலமாக அமைந்தார் என்பது கண்கூடு.

எனவே அமரத்துவம் அடைந்த அம்மையாரை நினைவு கூர்ந்து அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி J.P.**
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.
01-05-1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

நேற்றைக்கு இருந்தான் ஒருவன் இன்றைக்கு இல்லை என்பது இறைவன் நடாத்தும் திருவிளையாடல்களில் மிகவும் விநோதமானது என்கிறார் முதுபெரும் அறிஞர் இராஜாஜி அவர்கள். இதனையே தெய்வப்புலவர் திருவள்ளுவரும்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு" என்கிறார்.

தங்களின் அன்புத் தாயார் திருமதி துரைராசா பாக்கியம் அம்மையார் அவர்களின் சிவபதச் செய்தியை வானொலி மூலம் கேட்டோம். அவர்கள் காலமாகியமையால் நாம் துயருற்றோம். ஆயினும் புண்ணிய பூமியாகிய யாழ்ப்பானத்தில் ஏற்பட்ட பாரிய யுத்த இடப்பெயர்வினால் ஒருபகுதி மக்கள் கொழும்பு சென்று வாழ்ந்து வருகின்றனர். இதனால் இந்த இறந்த ஆத்துமாக்களின் பூதவுடல் இறுதியாத்திரைகளில் கலந்து கொள்வது சாத்தியமற்றது.

எங்கள் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்துப் பெருந்தலைவி சிவத்தமிழ் செல்வி அம்மா அவர்களின் நிர்வாக செயலகத்தில் அருந்ததி அக்கா பணிபுரிந்து வந்தார். இதனால் திரு. துரைராசா குடும்பத்தை அறிய எம்போன்றவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. உயர்ந்த பண்புகளைத் தன்னகத்தே கொண்ட திருமதி பாக்கியம் துரைராசா அம்மையார் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளை வேண்டுதல் செய்து, என் சார்பிலும் இதர கோயில் பணியாளர்கள் சார்பிலும் ஆழந்த அநுதாபத்தையும் அஞ்சலியையும் தெரிவித்து நிற்கிறோம்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
01-05-1998

கா. சிவபாலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!

அன்பும், அமைதியும் நிறைய அனைவரையும் இன் முகத்தோடு வரவேற்று மகிழும் குடும்பத் தலைவியாகிய பாக்கியரத்தினம் துரைராஜா அவர்கள் இயற்கை எய்திய செய்தி அவரது குடும்பத்தவரை மட்டுமல்ல அனைத்து உறவினர்களையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

திருமதி பாக்கியரத்தினம் நிறைந்த வாழ்வைப்பெற்ற ஒரு அன்புள்ளம் கொண்டவர். எத்தகைய சந்தர்ப்பத்திலும் கடினமான வார்த்தைகள் அவருடைய வாயிலிருந்து வருவதில்லை.

நிரம்பிய ஆங்கில அறிவு கொண்ட அமரர் பாக்கியரத்தினம் தமது ஓய்வு நேரங்களில் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் போதித்து வந்தார்.

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம். அசோகன், பாலகுமாரன், அகிலன், அருந்ததி, நளினி, இந்துமதி ஆறு புத்திரச் செல்வங்களைப் பெற்று அவர்களின் நிறைந்த வாழ்க்கைப் பேற்றை நிதர்சனமாகக் கண்டு அமரர் பாக்கியரத்தினம் அமைதியாகப் "பூவோடும் பொட்டோடும்" இயற்கை எய்தியுள்ளார்.

ஆறு பிள்ளைகளும் ஆறுபடை வீடுகளில் வாழ்வது போல பல நாடுகளில் பரந்து வாழ்கின்றனர்.

சீமேந்துக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற பின்னர் தனது வாழ்க்கைத் துணையின் பற்றுறுதியோடு வாழ்ந்து வந்த திரு. துரைராஜா தமது இல்லத்தரசியின் பிரிவால் கலங்கிப் போயுள்ளார்.

வாழ்க்கையில் மறைவு தவிர்க்க முடியாதது. குடும்ப விளக்கின் மறைவால் துயரமடைந்துள்ள அனைவரும் அமரர் பாக்கியரத்தினத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப் போமாக!

68, எலிகவுஸ் வீதி,
கொழும்பு-15.
12. சித்திரை. 1998

ஆ. சிவநேசச்செல்வன்
பிரதம ஆசிரியர்,
தினக்குரல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To be a father of only one daughter is a rare achievement. This was the cherished achievement of Mr. Ponnampalam Subramaniam and his sweet and pleasant wife Arunthathipillai. But Aunthathipillai died shortly after the birth of her daughter Pakiam was brought up by her father. Pakiam grew up to be a fond, dutiful and cheerful child. She found an extremely suitable partner in Sabapathy Durairajah. They got married at Tellipalai and begot illustrious children Asokan, Balakumaran, Arunthathi, Nalini, Indumathy and Akilan. Pakiam was blessed with two grand daughters. Thilothama and Dharmini, Balakumaran's children and one grandson Arthurvirichan, son of Varatharajah and Nalini.

Pakiam lived as a dutiful and fond wife. She looked after her children with extreme affection. She has left us peacefully at the age of 78 years. Her husband looked after her very well and looks fit to live for 100 years. Let Pakiam live in our hearts for evermore.

Prepared by
***S. Jokanathan***
(Pakiam's Cousin Brother)
Retired District Judge





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

23-4-1998 ல் இறைவனடி எய்திய எமது குடும்பத் தலைவி திரு. துரைராஜா அவர்களின் அன்பு மனைவி **திருமதி பாக்கியரத்தினம்** அவர்களின் இறுதிச் சடங்கின்போது பலவழிகளிலும் உதவிசெய்த உற்றார், உறவினர் அன்பர்களுக்கும், அன்னாரின் சபிண்டீ கரண ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றிய அனைவருக்கும், நினைவுமலரை சிறப்பாக அச்சிட்டு உதவிய லக்ஷ்மி அச்சகத்தினருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்
**கணவன், பிள்ளைகள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

கொழும்பு - 06.
23-05-1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

சபாபதி – செல்லாச்சிப்பிள்ளை

- துரைராஜா
- நாகலட்சுமி
  - பொன். நாகலிங்கம்
- அன்னபூரணம்
  - செல்லத்துரை

சுப்பிரமணியம் – அருந்ததிப்பிள்ளை

- பாக்கியரத்தினம்

**துரைராஜா + பாக்கியரத்தினம்**

- அசோகன் நமசிவாயம் + தவமணி
- பாலகுமாரன் சபாபதி + சாந்தினி
  - திலோத்தமி
  - தர்மினி
- அருந்ததி திவ்வியதர்சனி
- நளினி பிரியதர்சினி + வரதராஜன்
  - ஆதவிருட்சன்
- அகிலன் இராசையா
- இந்துமதி செல்வதர்சினி + சிவகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by: **Luxmi Printer**-195, Wolfendhal Street, Col-13, Tel: 330588, 448545

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org